**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.276/2019</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் சனிக்கிழமை வாதிகள் தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் (நிலை–I) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துசாமி | தந்தை பெயர் | : நடேசன் |
| ஜாதி | : | | கிராமம் | : |
| வட்டம் | : | | மதம் | : |
| தொழில் | : | | வயது | : |

நாள் : 01.08.2026

**P.W. : 1**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வழக்கறிஞராக உள்ளேன். நான் கடந்த 1985 ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தேன். அதுமுதல் தொடர்ந்து வழக்கறிஞர் தொழில்தான் செய்கிறேன். இந்த வழக்குப்பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். எங்களது வழக்குரையில் அருளானந்தத்தின்

வாரிசுகள் பற்றி விவரங்களை முறையாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதற்கான அவசியம் இந்த வழக்கில் இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை சேர்க்கவேண்டிய அவசியமில்லை. அருளானந்தத்தின் வாரிசுகள் அந்தோணி துரைராஜ், அந்தோணி துரைராஜ்–ன் மகள் எடித்ரோனா, டயானா கிரிஸ்டி, அருளானந்தத்தின் மகள் பார்த்திமா ஜெயராணி, பேரன் பெனிட்டோ ஜுவாரஸ், பேத்தி ஜாஸ்மின் ஜெமிமா ஆகியோர் இந்த வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல. அவர்களை சேர்க்கவேண்டிய அவசியமில்லை. பிரதிவாதி மிரட்டியதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மிரட்டியதாக சொல்வது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. அந்த புகார் பற்றி வழக்கில் சொல்லவில்லை, அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு மிரட்டவில்லை என்பதால் தான் அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் இருப்பிடத்திற்கும் அருளானந்தத்தின் இருப்பிடத்திற்கும் சுமார் 50 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அருளானந்தத்தின் இடத்திலிருந்து எங்கள் இடத்திற்கு வரவேண்டுமென்றால் 3 பேருந்துகள் மாறி வர வேண்டும் என்றால் சரிதான். அருளானந்தத்திற்கு இந்த வழக்கு சம்மந்தப்பட்ட உயில் எழுதிக்கொடுத்த சமயத்தில் வயது சுமார் 85 இருக்குமா என்றால் அது ஞாபகமில்லை. அருளானந்தத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் கீரனூரில் அருளானந்தமும் எனது உறவினரான

வேலுமணி என்ற பெண்ணும் வந்தனர். வேலுமணிதான் அருளானந்தத்தை அழைத்து வந்தார். எப்போது அருளானந்தத்துடன் அந்த வேலுமணி வருவாரா என்றால் முதல்முறை வந்தபோது வந்தார். எதற்காக அருளானந்தம் வேலுமணியுடன் வந்தார் என்றால், வழக்கு சம்மந்தமாக வந்து லால்குடியில் வழக்கு இருப்பதாகவும், அதை நடத்த முடியுமா என்றும் கேட்டார். நான் அங்கேயே ஒரு வழக்கறிஞரை பார்த்துக்கொள்ளும்படி அவரிடம் சொன்னேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது நான் வருவதாக அவரிடம் சொன்னேன். அதன்பிறகு அருளானந்தம் அங்கு வரவில்லை என்றால், அடிக்கடி என் வீட்டிற்கு வருவார், சிலசமயம் ஒரு நாள் சில சமயம் 3 நாள் அல்லது ஒரு வாரம் வரை கூட என் வீட்டில் தங்குவார். மேற்படி விவரத்தை எனது வழக்குரையிலோ முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக என்னிடம் கட்சிக்காரர் என்ற முறையில் வந்த அருளானந்தத்திடம் கையொப்பங்கள் வாங்கி அதை வைத்து பொய்யாக உயிலை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் போலியாக தயாரிக்கப்பட்டதாக சொல்லிதான் கட்சி செய்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரம் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவை என்றால் சரிதான். நான் அதை ஆன்லைனில் நகல் எடுத்துள்ளேன். எனது வழக்குரையில் 6, 7 ஆவணங்களாக ஆவணப்பட்டியலில் சொல்லியுள்ளவற்றை அது கண்டுள்ள 11.07.2019 தேதியில் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 11.07.2019 தேதியில் ஆன்லைன் மூலம் நான் தான் பதிவிறக்கம் செய்தேனா என்றால், என்

மகன் வாதி பொய்யாமொழி அதை பதிவிறக்கம் செய்தார். வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களை என் மகன் பொய்யாமொழி பதிவிறக்கம் செய்ததாக அதில் இல்லை என்றும், நான் தான் அதை பதிவிறக்கம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் என் பெயரை சொல்லியிருக்கலாம். நான் மேற்படி வா.சா.ஆ.9, 10 ஆவணங்கள் பற்றி 11.07.2019 சமயத்திலேயே எனக்கு தெரிந்துவிட்டது என்றும், ஆனால் அது தெரியாததுபோல் வழக்கறிவிப்பு அனுப்பி வழக்கை ஜோடித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சில விவரங்களை அவ்வாறு சொல்லியுள்ளேன். வழக்குரையில் சொல்லாத, முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் நிறைய பணஉதவி செய்ததாக சொல்லியுள்ளேன். அந்த விவரம் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.2000/-, ரூ.3000/- அல்லது ரூ.5000/- வரை பலமுறை அவருக்கு கொடுத்துள்ளேன். என் மகன் என் பாதுகாப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் மகன் பாதுகாப்பில் அருளானந்தம் இருந்திருக்க முடியாது என்றால், என் மகன் பாதுகாப்பில் அருளானந்தம் இருந்தார். உயில் தயார் செய்த வழக்கறிஞர் பெயர் ராஜ்குமார். அந்த உயிலை ராஜ்குமார் வீட்டில் வைத்துதான் தயார் செய்தார்கள். உயிலை ராஜ்குமார் எழுதி, என் மகனிடம் கொடுத்தார். என் மகனும் அருளானந்தமும் வெளியே சென்று அதை டைப் செய்து எடுத்துவந்தார்கள். எங்கு சென்று அதை டைப் அடித்தார்கள் என்றால்,

ஒரு கடையில் அடித்தார்கள் அது எந்த கடை என்று தெரியாது. அந்த கடை பற்றிய விவரம் என் மகனுக்குதான் தெரியும். நான் அந்த கடைக்கு உடன்போகவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 உயில் தொடர்பாக எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் உயில் தயாரிக்கும்போது கூடதான் இருந்தேன். உயிலில் நான் சாட்சியாக இல்லை. அம்சவள்ளி, பாலசுப்ரமணியம் ஆகியோர்தான் உயில் சாட்சியாவார்கள். அவர்கள் இருவரும் கீரனூரை சேர்ந்தவர்கள். உயிலை தயாரித்தவர் மற்றும் சாட்சியம் போட்டவர்கள் யாரும் அருளானந்தத்தின் சொந்த ஊரை சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் ராஜ் குமார் எழுதிய மாதிரி உயிலை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அவர் எழுதியவுடன் என் மகனிடமும், அருளானந்தத்திடமும் கொடுத்துவிட்டார். நான் உடனிருந்ததாக சொல்லும் நிலையில் அதை பார்க்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோன்ற சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் உடனிருந்துதால் நான் உயிலில் சாட்சி போட்டிருப்பேன் என்றும், இல்லாததால் தான் சாட்சி போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று உயில் தயாரிக்கப்படவில்லை என்றும், நான் தான் பின்னிட்டு வா.சா.ஆ.1 உயிலை மோசடியாக தயாரித்தேன் என்றால் சரியல்ல. என் மகன் மூலம் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் அருளானந்தம் 17.01.2018 ல் காலமாகிவிட்டார் என்று கூறியுள்ளது

முற்றிலும் பொய் என்றும், அருளானந்தம் 14.01.2018 அன்று தான் இறந்தார் என்றால் சரியல்ல.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.